# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு பொது/ சிறப்புக் கலைமாணித் தேர்வு

## 2015/ 2016 ஆகஸ்ட் - 2018

## 0HY 3233 Selected Themes of Sri Lankan History

நேரம் : 3 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

### பகுதி – I

1. "பொலன்னறுவைக் கால மன்னர்களில் முதலாம் பராக்கிரமபாகு சிறப்புற்ற மன்னனாவான்".
இக்கூற்றை மேல்வரும் தலைப்புக்களை அடிப்படையாகக்கொண்டு விடையெழுதுக.
(அ) சூளவம்சத்தில் பராக்கிரமபாகு பற்றி கூறப்படும் செய்திகளை விளக்குக. (10 புள்ளிகள்)
(ஆ) பராக்கிரமபாகுவின் ஆட்சிச் சிறப்புக்களை குறிப்பிட்டு விளக்குக. (10 புள்ளிகள்)

2. "சோழ படையெடுப்பிலிருந்து இலங்கையை மீட்ட மன்னனாக விஜயபாகு கருதப்படுகின்றான்".
இக்கூற்றை மேல்வரும் தலைப்புக்களை அடிப்படையாகக்கொண்டு பரிசீலனை செய்க.
(அ) விஜயபாகுவின் அரசியலும் போர்த் திறமையும். (10 புள்ளிகள்)
(ஆ) விஜயபாகுவின் சமயப்பணிகள் (10 புள்ளிகள்)

3. "பொலன்னறுவைக் கால மன்னர்கள் கடைப்பிடித்த வெளிநாட்டு கொள்கைகளை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.
(அ) நிஸங்கமல்லனின் இந்தியாவுடனான திருமணத் தொடர்புகள் (10 புள்ளிகள்)
(ஆ) பராக்கிரமபாகுவின் பாண்டிய, பர்மிய படையெடுப்புகள் (10 புள்ளிகள்)

### பகுதி – II

4. பொலன்னறுவைக் காலத்தை மையமாகக்கொண்ட இந்து சமயத்தின் வளர்ச்சி, அம்மதம் சார்ந்த கட்டிட, சிற்பக் கலை பற்றி தொல்லியற் சான்றுகளினூடாக ஆராய்க. (20 புள்ளிகள்)

5. இலக்கியச் சான்றுகளை மையமாகக்கொண்டு "சோழரும் இலங்கையும்" எனும் தலைப்பில் விமர்சன ரீதியாக கட்டுரை எழுதுக. (20 புள்ளிகள்)

6. "இலங்கை இராசதானி வரலாற்றில் சோழராட்சிக் கால நிர்வாகம் தனித்துவமான அம்சங்களைக் கொண்டிருந்தது." அதனடிப்படையில் சோழர்கால நிர்வாகக் கட்டமைப்பு, அதனூடாக மேற்கொள்ளப்படும் பணிமுறைகள் குறித்து விபரணக் கட்டுரை எழுதுக. (20 புள்ளிகள்)

7. பொலன்னறுவைக்கால அரசியலில் பௌத்த சங்கத்தின் செல்வாக்கினை இலக்கியச் சான்றுகளை மையமாகக்கொண்டு மதிப்பிடுக. (20 புள்ளிகள்)